**DEPOSITION OF WITNESS**

---

**MCOP. No. 1170/2020** **DATE:04.12.2025**

Deposition of Witness : R.W.2

Name : Mr. Iyyappan

Father/Husband Name : Mr. Gurusamy

Age :

Address :

Cell Phone No. :

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Act 44 of 1969) of the 4th day of December 2025.

---

**2 வது எதிர்மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை**

நான் இனோவா கார் ஓட்டிவருகிறேன். அந்த வாகனத்தின் உரிமையாளரும் நான் தான். நான் நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் இந்த மனுவில் முதல் எதிர்மனுதாரர் ஆவேன். என்னடைய ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். அது எமசாஆ 5 ஆகும். விபத்தானது இருசக்கர வாகனத்தில் வந்த நபர் தவறான பாதையில், எதிர் பாதையில் அஜாக்கிரதையாக வந்து என்னுடைய வாகனத்தின் மீது மோதிவிட்டார். நான் பதட்டத்தில் உடனடியாக புகார் கொடுக்கவில்லை. மறுநாள் காலையில் புகார் கொடுக்க காவல் நிலையம் சென்றேன் அதற்குள் போலிசார் விபத்து நடந்த இடத்திற்கு சென்று விசாரித்து ஆட்டோ டிரைவரிடம் புகார் பெற்றுக்கொண்டதால் என்னிடம் புகார் எதுவும் வாங்கவில்லை. இருசக்சர வாகனத்தில் வந்த இருவரும் ஹெல்மட் அணியவில்லை. அவர்கள் இருவரும் போதையில் இருந்ததாக மறுநாள் காவல் நிலையத்தில் போலிசார் சொன்னார்கள். இருசக்கர வாகனத்தை

ஓட்டி வந்த நபர் இறந்துபோனதாக மறுநாள் காவல் நிலையத்தில் போலிசார் தெரிவித்தனர். காயம்பட்ட நபர்களை நான் மருத்துவமனைக்கு கூட்டிச்சென்று சேர்க்கவில்லை. நான் அண்ணாநகரில் இருந்து கோயம்பேடு கேம்ஸ் வில்லேஜ் சிக்னலில் U turn எடுப்பதற்காக நான் நின்றுக்கொண்டிருந்தபோது நின்றுக்கொண்டிருந்த வாகனத்தின் மீது அவர்கள் இடித்தார்கள். விபத்திற்கு என்னுடைய தவறு காரணம் இல்லை, இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்த நபர் தான் காரணம்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை -**

இல்லை என முடிக்கப்படுகிறது.

**மறுவிசாரணை** - இல்லை.

X

என்னால் தட்டச்சருக்கு திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவர் சரி என ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.

தேதி:04.12.2025.

NAZIR AHAMED Digitally signed by NAZIR AHAMED

தலைமை நீதிபதி,
சிறுவழக்குகள் நீதிமன்றம்.